381

உ

கணபதி துணை.

மதுரை மீநாட்சியம்மை

# கொம்மைத் தமிழ்ப் பாட்டு.

இஃது

திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய

மகா-ள-ள-ஸ்ரீ

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று,

டை தமிழ்ச்சங்கம் பிரஸ் சூபரின்டேண்டேண்ட்

M. R. ஸ்ரீநிவாஸையரால்,

...த்தமிழ்ச்சங்கம் பவர்ப்பிரசில்

...ப்பிக்கபெற்றது 1000.

...வரு வைகாசிமீ 29உ

...] 1919 [விலை பைசா 6.

...:38:21195
N119.
179071

ஸ்ரீ.ரா.சுப்பிரமணியக்கவிராயரவர்கள் என்வேண்டுகோளுக்கிணங்கி, முதலிலே மீனாட்சியம்மை மீது கொம்மைத்தமிழ்ப்பாட்டைச் சிறு பெண்பிள்ளைகள் *கொம்மை கொட்டி விளையாடும் வண்ணஞ் செய்துகொடுத்தார்கள்; இதனை அச்சிட்டு விளையாடுஞ் சிறுபெண்களுக்குதவினா லெனக்கும் புண்ணியமுண்டாகுமென்றுகருதி, இத்தமிழ்ச்சங்கம் அச்சாபீசிலச்சிட்டு வெளிப்படுத்தினேன். இது மீனாட்சியம்மை கொம்மைத்தமிழ்ப்பாட்டானதால், அவ்வம்பிகையின் மகத்துவமே மிகுதியாகவெடுத்துக் கூறியிருக்கின்றது. இதிற்கூறிய தல விசேடமுதலியவெல்லாந் திருவிளையாடற்புராணத்திலறியலாகும். இத்தமிழ்ப்பாட்டு எளிய நடையுஞ், சொல்வளம் பொருள்வளமுள்ளதாயும், இலக்கியவிலக்கண முதலிய நூல்களைக் கற்றறிந்த வித்துவான்களும் அங்கீகரித்துப் பாராட்டுவதாயுமிருக்கின்றதென்பதை நானெடுத்துக்கூற வேண்டுமோ? படித்துணர்வோர்களறிவார்கள். அரிய பெரிய புராண முதலிய நூல்களெல்லாஞ் செய்துகொடுக்க வல்லவர்களாயிருக்கிற இக்கவிராயரவர்கள் என் வேண்டுகோட்கிணங்கி இதனைச்செய்துதவியதற்கு என்றும்மறவாத நன்றி பாராட்டுகின்றேன். சுபம். இங்ஙனம்,

ஸ்ரீநிவாஸையர்,

பிரஸ் சூபரின்டெண்டெண்ட், தமிழ்ச்சங்கம், மதுரை.

---

*கொம்மைகொட்டல்—கைகுவித்துக்கொட்டல்.



உ

கணபதிதுணை.

# மதுரை மீநாட்சியம்மை கொம்மைத்தமிழ்ப் பாட்டு.

மதுரைநகர்மீநாட்சி மகிழ்கோம்மைத்தமிழ்பாட
எதிர்பொற்றாமரைக்கரையி லிருக்கும்விநாயகர்காப்பு. (க)

உயர்மதுரைநகர்போல வுலகிலொருநகரமில்லை
நயமிகுமீநாட்சியைப்போ னல்லவொருதெய்வமில்லை (உ)

தந்தைதாயிரண்டொழியத் தாம்வேண்டும்பொருளெல்லாம்
எந்தவேளையுமுதவு மிம்மதுரைக்கடைவீதி (ங)

திருமதுரைமேடைகண்மேற் றினம்விளையாடும்பெண்கள்
பெரியதேவலோகமுள்ள பெண்களைப்போற்றோன்றுவரே ( )

வீதிகளினொழுங்குகளு மேடைகளின்வரிசைகளும்
ஓதுமதுரையிற்போல வோரூர்தன்னிலுமில்லையே (௫)

மீனாட்சியம்மதுரை மேலாசைகொண்டதனால்
தானாட்சிசெய்திருந்தாள் தங்கமணிமுடிசூடி (௬)

சொக்கலிங்கர்மீனாட்சி துலங்கியிருந்தருளுகின்ற
இக்கோவிலுக்குநிக ரெத்தலத்துமில்லையில்லை (௭)

சித்திரையிற்பூரணை முன் றேர்த்திருநாள்காண்பதனுக்
கெத்திசையும்வரும்பெருமை யேவர்சொல்லமுடியுமடி (௮)

வந்திபிட்டின்மேலாசை வைத்தசொக்கர்மண்சுமந்த
அந்தவொருதிருநாளிற் கரியபெருந்திருநாளடி (௯)

மாதந்தோறுந்திருநாள் வழங்குமிந்தத்தலத்தினிற்போற்
பூதலத்திலெத்தலத்தும் பொருந்திடாங்காணுமடி (௰)

வரகுணபாண்டியன்காண வந்ததிங்கேசிவலோகம்
இராமதனாற்பூவுலகிற் சிவலோகமென்பாரடி (௰௧)

நாலுபெருங்கோபுரங்கள் நங்கையரேபூமிதேவி
மேலுலகைத்தொடுங்கரம்போல் விளங்கிநிற்கும்பாருங்கடி ( )

அந்தநாலுகோபுரங்களண்டமெலாந்தாங்கவைத்த
அந்தநாலுகால்களைப்போ லசையாமனிற்குமடி (௰௩)

நாலுசின்னக்கோபுரங்கள் நால்வகையாகிலத்தோர்கள்
மேலுலகிற்போவதற்கு விளங்குமேணிபோலுமடி (௰௪)

தங்கமேருமலைபொன்மலை தாமிரண்டுபோலிருக்கும்
எங்கள்சொக்கர்மீனாட்சி யிருக்கும்விமானங்களடி (௰௫)

அம்பலமைந்தினில்வெள்ளி யம்பலமொன்றுண திங்கே
நம்பெருமான்கான்மாறி நடனமதுசெய்தாரடி (௧௬)

அந்நாளிற்சொக்கரெதி ரானதொருமண்டபந்தான்
எந்நாளும்புதுமண்டப மென்ச்சொல்லவிளங்குமடி (௧௭)

அனையபுதுமண்டபத்தி லாடையணிமுதற்பொருள்கள்
தினம்புதிதுபுதிதாகச் சேர்ந்துவிற்கும்பாருங்கடி (௧௮)

ஒவ்வொருதூணிலுந்தேவ ருருவங்கள்செய்திருக்கும்
இவ்விதமாமண்டபம்போ லெங்ராசர்செய்தாரடி (௧௯)

சீர்திகழெண்ணைக்காப்புத் திருநாளிம்மண்டபத்தின்
மார்கழிமாசங்காண வருவார்பல்கோடியடி (௨௰)

கல்லாருங்கற்றாரும் காட்சியிந்தமண்டபத்தில்
எல்லாங்கண்டுவேந்திதுபோ லெங்குமில்லையென்பாரடி (௨௧)

நயம்பெறுமிம்மண்டபத்தை நாட்டுதிருமலைமன்னன்
உயர்ந்ததைப்பூசத்திருநாட் கொருவாவிசெய்தானடி (௨௨)

குமரகுருபரமுனிவர் குலவுபுராணந்தன்னில்
அமைதேவிக்கிவன்செய்பணி யனைத்துநன்றுவிளங்குமடி ()

அந்நாளிவ்வாலயத்தி லமைத்தசங்கந்தனைப்போல
இந்நாளுந்தமிழ்ச்சங்க மிந்நகரில்விளங்குமடி (௨௪)

ஆயிரக்கால்மண்டபத்தி லங்கொருகாலாடுமே
ஓயாதுநடராச ரொருகாலுமாடுமடி (௨௫)

நூற்றுக்கால்மண்டபச்சீர் நூலறிந்தோர்சொல்வரன்றி
வேற்றொருவர்சொல்லுவரோ மேதினியிலில்லையடி (௨௬)

கலியாணமண்டபத்திற் கலியாணக்காட்சியதைச்
சலியாமற்காணக்கண் டாமாயிரம்வேண்டுமடி (௨௭)

சத்தியுமைமீனாட்சி தானிருக்குஞ்சந்நிதியில்
நித்தியமுங்கலியாண நிகழ்வதுபோற்றோன்றுமடி (௨௮)

சந்தனங்குங்குமமாலை தாம்பூலம்பழவகைகள்
இந்தச்சந்நிதியினிலா யிரம்பேர்கள்விற்பாரடி (௨௯)

அதிரசந்தேன்குழன்முதலா வனைத்துமிச்சந்நிதியில்விற்பார்
அதிரசமாயிருக்குமென வருந்தினவர்சொல்வாரடி (௩௰)

சிவகங்கைமருதுராசன் றிருவாசிகைவிளக்குப்
புவியினட்சத்திரக்கூட்டம் புகுந்தனபோல்விளங்குமடி (௩௧)

திருக்கோயிலெங்கெங்குந் திகழ்சாந்தவிளக்கொளிகள்
விரித்திடல்பல்சூரியர்கள் விளங்கிடுதல்போலுமடி (௩௨)

ஆடிவீதிப்பிரகார மன்பின்வலம்வருவார்க்கு
நாடுபிள்ளைப்பேறுமுத னல்லவரங்கிடைக்குமடி (௩௩)

கங்கையரேசேனுங்க ணல்லபொற்றாமரைத்தீர்த்தம்
எங்குமுள்ளதீர்த்தங்கட் கிதுசிரமாயிருக்குமடி (௩௪)

இந்திரன்றான்பூசைசெய்ய வெழுந்தனபொற்றாமரைகள்
இந்தநல்லகாரணத்தா லிசைப்பர்பொற்றாமரைப்பேரடி ()

சுந்தரேசராங்கையினிற் சூலம்பூமியிற்றுளைக்க
அந்தவழியெழுந்ததிந்த வருமையானதீர்த்தமடி (௩௬)

அங்கையினாற்சுந்தரேச ரதையடக்கிச்சடைக்கங்கை
தங்கவிட்டுச்சிவதீர்த்தந் தானாகச்செய்தாரடி (௩௭)

ஒருவருட்டிதின்முழுகி யுமைபாகர்தமைப்பணிந்தால்
உரியபிள்ளைமலடிக்கு முண்டாகுமென்பாரடி (௩௮)

தள்ளாமலிதிற்பிதிரர் தருப்பணஞ்செய் தாலவர்தாம்
எள்ளுக்காயிரமாண்டா யிருப்பார்பொன்னுலகமடி (௩௯)

இத்தீர்த்தஞ்சுந்தரேசர்க் கினிதபிடேகஞ்செய்தால்
எத்தீர்த்தங்களுமாட்டி யிடும்பலன்களெய்துமடி (௪௰)

முற்பிறப்பிற்றவந்தான முறையாகச்செய்தோர்க்கே
யிப்பிறப்பிலித்தீர்த்த மென்றுமூழ்கக்கிடைக்குமடி (௪௧)

இன்னதீர்த்தமீனாட்சி யிறைவர்தமைநினைந்துமூழ்கில்
என்னநன்மைகளுமெய்தி யிருங்கதிபின்பெறுவாரடி (௪௨)

உயர்ந்தவித்தீர்த்தக்கரையி லொருதினத்திற்பூசைசெபம்
நயந்துசெய்தாற்பலநாட்செய் நல்லபயன்பெறுவாரடி (௪௩)

அனைதேவிசந்நிதியி லம்மைமீனாட்சியென்றே
தினந்தினமுங்கிளிகள்சொல செய்தனவெத்தவங்களடி (௪௪)

சித்திவிநாயகர்கந்தர் திருவடியைமுன்பணிந்தே
பத்தியுடன்மீனாட்சி பாதங்கள்பணிவாரடி (௪௫)

தங்கமணிமுடிதரித்துத் தங்கமணிப்பணிபூண்ட
அங்கயற்கண்ணியைக்கண்டா ரானந்தங்கொள்வாரடி (௪௬)

கைகள்சிரமேற்குவிய கண்களானந்தவெள்ளம்
மெய்பொழியத்தேவிதிரு மேனியையுண்ணினைப்பாரடி (௪௭)

திருக்கோலந்தெரிசிக்கத் தேவியருள்கிடைத்ததனால்
ஒருக்காலும்பிறவிநமக் குற்றிடாதென்றுரைப்பாரடி (௪௮)

தெரிசிக்கமீனாட்சி திருக்கோலங்காட்டினதாற்
பெரிதெனவேயொருதெய்வம் பேணுகிலோமென்பாரடி (௪௯)

தேவிதிருக்காட்சியென்றுந் தெரிசிக்கக்கிடைக்குமென்றாற்
பூவுலகிலிப்பிறவி பொருந்தவேண்டுமென்பாரடி (௫௰)

திருமேனிதெரிசிக்கத் தேவியருள்செய்ததனால்
ஒருவரமுந்தரவென்ன வுரைக்கவேண்டாவென்பாரடி (௫௧)

தேவி திருமேனிகண்டோர் சித்தமிகக்கரைந்துருகி
ஆவல்கொண்டுமகிழ்ச்சியுற்றே யகலாமனிற்பாரடி (௫௨)
தேவிமாகதமேனித் திருக்கோலக்காட்சிகண்டு
மேவியிருந்தாலதுவே வீடென் றுசொல்வாரடி (௫௩)
தினந்தினமங்கயற்கண்ணி திருமேனிக்காட்சிதனை
மனங்கொளன்பர்பொய்களவு வஞ்சனைகள்செய்யாரடி (௫௪)
அங்கயற்கண்ணியைமனத்தி லன்புடனேபணிவார்கள்
இங்கெவருஞ்செல்வமெலா மெய்திமகிழ்ந்திருப்பாரடி (௫௫)
குமரகுருபரமுனிவர் கூறுபிள்ளைத்தமிழ்க்கருளும்
அமைதேவிநந்தமிழ்க்கு மருள்வாளோவறியோமடி (௫௬)
அமுதுதவியருச்சனைசெய் தாற்றேவியருள்பதவி
நமதொருவாய்போதாது நங்கையரேசொல்லவடி (௫௭)
எங்கேசென் றிருந்தாலு மித்தேவிதனைநினைத்தால்
அங்கேவந்தருள்புரிவா ளன்பர்தமைவிரும்பியடி (௫௮)
அறுபத்துநாலுவிளை யாடல்கண்டுமகிழ்தேவி
சிறியவர்நம்விளையாட்டுஞ் சிந்தையுவந்தருள்வாளடி (௫௯)
இத்தேவிதனைப்பணிந்தா ரிம்முறையாற்சொக்கர்தமை
நத்தியன்பாற்பணிவார்க ளுணிலத்துள்ளோர்களடி (௬௰)
சொக்கேசரைந்தொழிலுந் துலங்குமித்தேவியினாலே
எக்காலுஞ்செய்வரெனி லிவள்பெருமைபெருமையடி (௬௧)
இத்தேவிநாட்டுவள ரினியதமிழ்மேலாசை
வைத்தேசொக்கேசர்சங்க வான்புலவரானாரடி (௬௨)
கொம்மைகொட்டிமீநாட்சி குணங்களைநாம்பாடுவமேல்
இம்மையிலேநினைத்தவரமெல்லாந்தந்தருள்வாளடி (௬௩)
ஆட்கொண்டமீநாட்சி யம்மைகொம்மைத்தமிழ்ப்பாட்டைக்
கேட்போரும்படிப்போருங் கிளையுடனேவாழியவே. (௬௪)

சுபம்.